புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அரையப்பட்டி ஊராட்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், 'கலைஞரின் வருமுன் காப்போம்' திட்ட மருத்துவ முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.நமச்சிவாயம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

காளையார் கோவிலில்

மாற்றுக் கட்சியினர் கழகத்தில் சேர்ந்தனர்!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் - ஆ.ராசா எம்.பி. முன்னிலை!

சிவகங்கை, அக். 21 - சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நேற்று முன்தினம் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் வே.ஆரோக்கிய சாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் காளையார் கோவில் ஒன்றிய பகுதியிலிருந்து அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த துரை, பூமா, காந்தி, காயத்ரி, ராஜாங்கம், உட்பட 70 பேர்களும் ம.தி.மு.கவிலிருந்து எம். காளீஸ்வரன், குமார், செல்லத்துரை, சதாசிவம் உட்பட 25 பேர்களும் பா.ஜ.க.வில் இருந்து முனியாண்டி உட்பட 25 பேர்களும் மொத்தம் 100க்கும் மேற்பட்ட கட்சியினர் மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுற வுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் மாநில கழக துணை பொது செயலாளர் ஆ.ராசா எம்.பி. முன்னிலையில் தி.மு.க.வில் சேர்ந்தார்கள். அவர்களுக்கு காளையார்கோவில் ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி சால்வை அணிவித்து வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் அ. கணேசன், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், கே.எஸ்.எம்.மணி முத்து கலந்து கொண்டார்கள்.

கலைஞர் நூற்றாண்டுவிழாவையொட்டி தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக மாவட்டக் மாணவரணி சார்பில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் என்.பி. பெரியண்ணன் ஏற்பாட்டில் தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி மற்றும் மாணவரணி மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர்.இரா. தமிழரசன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவியர்களுக்கான, பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.நிகழ்ச்சியில் மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர். ஆ.மணி, ஒன்றிய செயலாளர்கள் வைகுந்தம், முருகேசன்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கௌதம், ஹரி விக்னேஷ், பூவண்ணன், வானவில் சண்முகம், போர்வெல் ராஜ்,மாணவரணி துணை அமைப்பாளர்கள் கா.கௌதமன், அன்பரசன், வேடியப்பன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் - அரியலூர் மாவட்டம் - ஒன்றிய - நகர-

பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் - குன்னம் சி.இராஜேந்திரன் - எம்.பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர். அக். 21- பெரம்பலூர் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல், பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், எஸ். ஜோயல், இன்பா,ஏ.என். ரகு, நா.இளையராஜா, ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, ஜி.பிரதீப்ராஜா, சி.ஆனந்த குமார் ஆகியோர் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தினார்கள்.

இந்த நேர்காணலில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்டச் செயலாளர் குன்னம்சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, டாக்டர் செ.வல்லபன், பொதுக் குழு உறுப்பினர் எஸ்.அண்ணாதுரை, பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரி பாஸ்கர், அரியலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா, ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ். நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், பேரூர் செயலாளர்கள் ஏ. எஸ்.ஜாகீர்உசேன், எம். வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், அரியலூர் மாவட்ட ஒன்றிய கழக செயலாளர்கள் கோ.அறிவழகன், மா.அன்பழகன், வா.சௌந்தரராஜன், ரெ. அசோகசக்கரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.ஷாஜகான் பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், தங்க.கமல், வ.சுப்ர மணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், அரியலூர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீர.சிவா, எஸ்.ஆர்.முருகேசன், ஆ. தமிழ்மாறன், சுபா.ச.வசந்த பகலவன், த.குணசீலன், சோ.ப. தர்மராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலைக்கு வருகை தரும் முதலமைச்சருக்கு

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.வினர் சிறப்பான வரவேற்பு!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள்!

செஞ்சி, அக். 21 - விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வடக்குமண்டலத்திற்குட்பட்ட மாவட்டக் கழகங்களில் உள்ள தொகுதியில் அடங்கி உள்ள வாக்குச் சாவடிதொகுதியில் அடங்கியுள்ளவாக்குச்சாவடிநிலை குழு முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டம் நாளை (22.10.2023. - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணா மலை ஒன்றியம் மலப்பாம்பாடி ஊராட்சி அருணாச்சலம் நகரில் அமைந்துள்ள கலைஞர் திடலில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து சாலை மார்க்கமாக திண்டிவனம், தீவனூர் ,செஞ்சி வழியாக திருவண்ணாமலைக்கு செல்கிறார் திருவண்ணா மலைக்கு செல்லும்தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் தொகுதி திமுக சார்பில் திண்டிவனம் சந்தைமேடு பகுதியிலும், மயிலம் தொகுதி தி.மு.க. சார்பில் தீவனூர் நான்குமுனை சந்திப்பிலும் .செஞ்சி தொகுதி தி.மு.க. சார்பில் செஞ்சி நான்குமுனைசந்திப்பில் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும். வரவேற்பு நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர், ஊராட்சி கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் திமுக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக வருகை தந்து முதல மைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மன்னை பா.நாராயண சாமி பிறந்தநாள்!

மன்னை நகர தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

அரசு கொறடா கோ.வி.செழியன் - ராமலிங்கம் எம்.பி. சிறப்புரை!

மன்னார்குடி, அக்21 - முன்னாள் அமைச்சர் மன்னை பா.நாராயண சாமி அவர்களின் 104வது பிறந்தநாளை முன்னிட்டு, மன்னார்குடி நகர கழகம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் தலைமை கொறடா முனைவர் கோவி. செழியன், திருவிடைமருதூர் ராமலிங்கம் எம்.பி. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

தி.மு.க. மூத்த நிர்வாகியும் ,தலைவர் கலைஞர் அவர்களின் நண்பருமான முன்னாள் அமைச்சர் சுயமரியாதை சுடர் மன்னை பா.நாராயண சாமி அவர்களின் 104வது பிறந்தநாளை முன்னிட்டு மன்னார்குடி நகர கழகம் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மன்னார்குடி நகர திமுக சார்பில் நகர கழக செயலாளர் வீரா.கணேசன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பொதுக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன் அவர்களும் திருவிடைமருதூர் ராமலிங்கம் எம்.பி.அவர்களும் பங்கேற்று சிறப்புரை யாற்றினார்.

கழக சட்டத்திருத்தக் குழு உறுப்பினர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம் ,திருவாரூர் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மன்னார்குடி நகரமன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், நீடாமங்கலம் ஒன்றிய தலைவர் சோம.செந்தமிழ் செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கலைவாணி மோகன் , காஞ்சித்துரை ,ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ்,சித்தேறி சிவா, நா.கவியரசு,கே.வி.கே.ஆனந்த், , பால.ஞானவேல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சோபா.கணேசன் ,மாவட்ட பிரதிநிதிகள் உத்தமன், மணிமாறன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்ட சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டம், கோலியனூரில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா.இலட்சுமணன் கலந்து கொண்டார். இவ்விழாவில் பி.தெய்வசிகாமணி, க.மும்மூர்த்தி, இ.சச்சிதானந்தம், இரா.கண்ணப்பன், பி.ஜீவா, செந்தில், இரா.கேசவன், ஜி.தவமணி, தமிழ்ச்செல்வி கேசவன், வனிதா அரிராமன், ஜெயலட்சுமி தெய்வசிகாமணி, பச்சையம்மாள் இன்பசேகரன், வசந்தி சந்திரசேகர், சௌந்தர்ராஜன், கிருபாநிதி, முகிலன், அசோக், சங்கர். சௌந்தர்ராஜன், குணசேகரன், குப்புசாமி,என்.ஆர்.மணி, முத்துசாமி, அலுவலர்கள் கவிதா, எஸ்.லலிதா, ஸ்ரீதர், ஜெயந்தி, ராதாகிருஷ்ணன், சிவகுரு, அய்யனார், பாலு, ரமேஷ், நேதாஜி, சிவராமன், நீலகண்டன், சுரேஷ், ரகுபதி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து

ரூ.43.05 கோடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதி!

அமைச்சர்கள் கே.என்.நேரு - பி.கே.சேகர்பாபு வழங்கினர்!

சென்னை, அக்.21- முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (19.10.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மாதவரம் சரக்குந்து முனையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.30.30 கோடி நிதி, பெருநகர சென்னை மாநகராட்சியின் இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் 51 ஸ்கிட் ஸ்டீர் லோடர்கள் (51 Skid Steer Loaders) கொள்முதல் செய்வதற்காக ரூ.12.75 கோடி நிதி என மொத்தம் ரூ.43.05 கோடி நிதி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது.

இதில் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர் சந்திப்பில் பேசியதாவது:

முதலமைச்சர் உத்தரவின்படி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சட்டமன்றத்தில் இலாக்காக்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டால், எந்தப் பணியினை முதலில் செய்ய வேண்டும் என்றும், அதற்கான திட்ட அறிக்கை மற்றும் தொகையை முடிவு செய்து, பணியினை உடனடியாக தொடங்கிட வேண்டும் என்பதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் என்னென்ன பணிகளை முதலில் மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து, அதற்கான விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும் எனவும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டவுடன், முடிவு செய்யப்பட்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும், மழை பெய்வதற்கு முன்பதாக அனைத்து பணிகளையும் தொடங்கப்பட வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்கள்.

அதனடிப்படையில், அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த வருடம் ஒதுக்கப்பட்ட தொகையில் 5 சதவீதம் தவிர, மற்ற அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அனைத்து பணிகளும் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அனைத்து சாலைகளும் முழுமையாக போடப்பட்டுள்ளது. மழைக்காலங்களை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளை சுத்தம் செய்யும் பணிகள் மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னையைப் பொறுத்தவரை, சாலைப் பணிகள் உள்ளிட்ட பணிகளுக்காக கிட்டத்தட்ட ரூ.2000 கோடியினை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்தார்கள். இவற்றில் முதற்கட்டமாக 5000 சாலைப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், மழைக்காலங்களில் பொதுமக்களை தங்கவைப்பதற்கான நிவாரண மையங்கள் மற்றும் மையங்களில் தங்குபவர்களுக்கு தேவையான உணவு மற்றும் அடிப்படை வசதிகள் ஆகிய வை தயார்நிலையில் உள்ளன. மழையின் காரணமாக விழும் மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்றும் வகையில் மர அறுவை இயந்திரங்கள், மழைநீர் தேங்கினால் அவற்றை அகற்றும் வகையில் 700க்கும் மேற்பட்ட மோட்டார் பம்புகள் ஆகியவை தயார் நிலையில் உள்ளன. மேலும், நீர்நிலைகளில் உள்ள ஆகாயத் தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றப்பட்டு மழைநீர் எளிதில் செல்லும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளும் வகையிலும், பொதுமக்களும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலும் அனைத்து நடவடிக்கைகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேச்சு!

இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மாதவரம் பேருந்து நிலையம் மற்றும் மாதவரம் சரக்குந்து முனையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக நீண்ட நாட்களாக இருந்த கோரிக்கையை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் உடனடியாக பெருநகர சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிக்கு அந்த நிதியை ஒதுக்கிடுமாறு உத்தரவிட்டதின்பேரில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மாதவரம் பேருந்து நிலையம் மற்றும் மாதவரம் சரக்குந்து முனையத்திற்கு ரூ.30.30 கோடிக்கான காசோலையும் மற்றும் அதேபேல் சென்னையில் சிறுசிறு தெருக்களில் இருக்கின்ற குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றுவதற்கு மிகுந்த பயனுள்ள இயந்திரமான பாப்கேட் என்று சொல்லக்கூடிய இயந்திரத்தை வாங்குவதற்காக ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் 51 பாப்கேட் ஸ்கிட் ஸ்டீர் லோடர்கள் (51 Bob cat Skid Steer Loaders) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மொத்தம் ரூ.43.05 கோடிக்கான காசோலைகள் இன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலாளர் சி.சமய மூர்த்தி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ். சமீரன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஏரியூர் ஒன்றியக் கழகச் செயலாளர்

என்.செல்வராஜ் தாயார் என்.கண்ணம்மாள் மறைவு!

தடங்கம் பெ.சுப்பிரமணி - பி.என்.பி.இன்பசேகரன் அஞ்சலி!

தருமபுரி, அக்.21- தருமபுரி கிழக்கு மாவட்டம் ஏரியூர் ஒன்றியச் செயலாளர் என்.செல்வராஜ் தாயார் மறைவுக்கு கழகத்தினர் அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறினர்.

தர்மபுரி கிழக்கு மாவட்டம் ஏரியூர் ஒன்றியக் கழகச் செயலாளர் என்.செல்வராஜ் தாயார் என். கண்ணம்மாள் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன் மற்றும் கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறினர்.

ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் சு.முத்துசாமி பங்கேற்பு!

அன்னூர் வடக்கில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

தொ.அ.ரவி - திப்பம்பட்டி ஆறுசாமி - ந.பழனிசாமி- இ.ஆனந்தன் சிறப்புரை!

கோவை, அக். 21- கோவை வடக்கு மாவட்டம், அன்னூர் வடக்கு ஒன்றியம், தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் இன்று (21.10.2023) பல்வேறு ஊராட்சிகளில் நடைபெறுகின்றது.

இதில் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் சு.முத்துசாமி சிறப்புரையாற்றுகின்றனர். மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி கருத்துரை வழங்குகிறார். மாவட்ட கவுன்சிலர் இ.ஆனந்தன் முன்னிலை வகிக்கிறார். திப்பம்பட்டி ஆறுச்சாமி பங்கேற்கிறார். நிகழ்ச்சி ஏற்பாடு ஒன்றியச் செயலாளர்ந.பழனிச்சாமி செய்துள்ளார்.

சேலம் மேற்கு மாவட்ட ம் மேட்டூர் தொகுதி நங்கவள்ளி ஒன்றியம் கோனூர் ஊராட்சியின் சார்பில் நடைபெற்ற பாக முகவர்கள் கூட்டத்தில் தொகுதி மேற்பார்வையாளர் மற்றும் மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர அர்த்தநாரீஸ்வரன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வைரமணி, முன்னாள் ஊராட்சி தலைவர் தமிழ்வாணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.